# குடும்ப குறிப்புத் தாள்: இடைஓய்வு

resourcecentre@hollandbloorview.ca

**இந்தக் குறிப்புத் தாளில், நீங்கள் இதன் மீதான தகவல்களைக் காண்பீர்கள்:**

- இடைஓய்வு என்றால் என்ன
- முழுநிறைவான ஆதரவுப் பணியாளரைக் கண்டுபிடித்தல்
- ஒரு ஆதரவுப் பணியாளரை நேர்காணல் செய்து பணியமர்த்தல்
- ஒரு ஆதரவுப் பணியாளருக்குப் பயிற்சியளித்தல்

## இடைஓய்வு என்றால் என்ன?

இடைஓய்வு பராமரிப்பு ஆனது குறைபாடு கொண்டுள்ள ஒரு குடும்ப உறுப்பினருக்கான பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள உடல்ரீதியான மற்றும் உணர்வுரீதியான தேவைகளில் இருந்து ஒரு குறுகிய கால திட்டமிடப்பட்ட இடைவேளையை அளிக்கிறது. இடைஓய்வு ஆனது அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் சுறுசுறுப்புடன் வாழ்வதற்கும் சமூகச் செயல்பாடுகளில் பங்கேற்பதற்குமான சிறந்த வாய்ப்புகளை உருவாக்குகிறது, மேலும் இது பெற்றோர்கள்/காப்பாளர்கள் தங்களுக்காக நேரத்தைச் செலவிட அனுமதிக்கிறது. (www.respiteservices.com)

### இந்த இடைவேளையின்போது, ஓர் இடைஓய்வு/ஆதரவுப் பணியாளர் இவற்றைச் செய்ய முடியும்:

- ஒரு சமூக வெளியிடத்துக்கு உங்கள் குடும்ப உறுப்பினரை அழைத்துச் செல்லுதல் உ-ம் பூங்கா, மிருகக்காட்சி சாலை, மால், உணவகம்
- ஒரு சிற்றுண்டியைத் தயாரிப்பது பற்றி உங்கள் குடும்ப உறுப்பினருக்குக் கற்பித்தல்
- உங்கள் குடும்ப உறுப்பினருடன் கூடைப்பந்து விளையாடுதல் அல்லது ஒரு நடைப்பயிற்சிக்குச் செல்லுதல்
- உங்கள் குடும்ப உறுப்பினருடன் பலகை விளையாட்டுக்கள் விளையாடுதல் அல்லது தொலைக்காட்சி பார்த்தல்
- உங்கள் குடும்ப உறுப்பினரை ஒரு கலை நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லுதல்



### குறுகியகால இடைவேளைகள் (இடைஓய்வு) ஏன் முக்கியமானவை?

- குறுகியகால இடைவேளைகள் குறைபாடுகளுடன் கூடிய குழந்தைகளுக்கு நண்பர்கள் அல்லது பிற நபர்களுடன் செய்ய வேண்டிய வேடிக்கையான விஷயங்களை அளிக்கின்றன.
- வேறு ஒருவரைப் பராமரித்தல் என்பது சில சமயங்களில் மனஅழுத்தம் நிறைந்ததாக இருக்கக்கூடும். குறுகியகால இடைவேளைகள் குடும்பத்தினர் தங்களை மீண்டும் ஆற்றல்படுத்திக்கொள்ள உதவுகின்றன, இதனால் அவர்கள் ஆரோக்கியமான மற்றும் நேர்மறையான உறவுமுறைகளைப் பராமரிக்க முடியும்.
- இடைஓய்வு என்பது ஒரு குழந்தை ஒரு இடைஓய்வு/ஆதரவுப் பணியாளருடன் செலவழிக்கும் நேரத்தை நேரத்தை உள்ளடக்கலாம், மேலும் இது அக்குழந்தை கோடைகால முகாம் அல்லது ஓர் இரவு முழுவதுமான நிகழ்ச்சி போன்ற ஒரு நிகழ்ச்சிக்குச் செல்வதாகவும் இருக்கக்கூடும்.

The Grocery Foundation Family Resource Centre ஆனது பல இடைஓய்வு சேவைகள் மீதான தகவல்களை உங்களுக்கு வழங்கக்கூடும். இதைத் தொடங்குவதற்கான இரு இடங்களாவன www.respiteservices.com மற்றும் www.hollandbloorview.ca/respite

## முழுநிறைவான ஆதரவுப் பணியாளரைக் கண்டுபிடித்தல்

ஒரு இடைஓய்வுப் பணியாளரால் ஒரு குழந்தைக்கு செயல்பாடுகளில் ஆதரவளித்து அவர்கள் கற்றுக்கொள்வதற்கு உதவ முடியும். இந்தக் குறிப்புத் தாளானது ஒரு ஆதரவுப் பணியாளரைத் தேடும்போது மனதில் கொள்ள வேண்டியது என்ன என்பதைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது.

### உங்கள் தேடலைத் தொடங்கும்போது, இவற்றைக் குறித்து எண்ணவும்:

ஒரு ஆதரவுப் பணியாளரிடத்து இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பக்கூடிய **குணாதிசயங்கள்.** நீங்கள் இவ்வாறு இருக்கக்கூடிய ஒரு பணியாளரை எதிர்பார்க்கக்கூடும்:

- கனிவானவர் மற்றும் மென்மையானவர்
- பொறுப்பானவர்
- ஒரு “நல்ல மனிதர்”
- ஒரு நல்ல ஆசிரியர்
- கவனமானவர் மற்றும் பரிவுகொண்டவர்

உங்கள் குடும்ப உறுப்பினர் பின்வருவன உள்ளிட்ட என்ன ஈடுபடக்கூடிய **செயல்பாடுகளில்** ஈடுபடுவார்:

- விளையாட்டு
- இசை
- விளையாட்டுக்கள் ஆடுதல்
- சமைத்தல்
- தங்களுக்கான விஷயங்களை செய்துகொள்ளக் கற்றுக்கொள்ளுதல்

**உங்களுக்கு** எப்போது ஒரு ஆதரவுப் பணியாளர் தேவை:

- நாளின் எந்த நேரத்தில்?
- வாரத்தின் எந்த நாளில்?
- எத்தனை மணிநேரம்?
- ஆண்டின் எந்த காலத்தில்?
- உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஆதரவுப் பணியாளர் எவ்வளவு அடிக்கடி தேவைப்படுவார்?

## நேர்காணலுக்கு சரியான நபர்களைத் தேர்வுசெய்தல்

குழந்தைகள், இளைஞர்கள் அல்லது பதின்மர் வயதினருடன் வேலைசெய்த **அனுபவம்** கொண்டுள்ள ஒருவரைப் பரிசீலிக்கவும்:

- நீச்சல் பயிற்சியாளர்
- முகாம் கலந்தாலோசகர்
- ஓய்வுபெற்ற ஆசிரியர்
- கல்லூரி அல்லது பல்கலைக்கழக மாணவர் அல்லது நன்கு வளர்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்

**ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்த மற்றும் உங்கள் குடும்ப உறுப்பினருடன் நன்றாகப் பழகுகின்ற** ஒருவரைப் பரிசீலியுங்கள்

- அவர் உங்களின் அண்டை வீட்டாராக, குடும்ப நண்பராக அல்லது பள்ளியில் உங்கள் குடும்ப உறுப்பினருக்குத் தெரிந்த ஒரு மாணவராக இருக்கக்கூடும்

உங்கள் குடும்ப உறுப்பினருக்கான **வெவ்வேறு செயல்பாடுகளுக்கான** பணியாளர்களைப் பரிசீலிக்கவும். உதாரணமாக:

- விளையாட்டுக்களை விரும்புகின்ற ஒரு பணியாளர், இதனால் அவர்கள் ஒரு அரங்க விளையாட்டைக் காணச் செல்ல முடியும்
- இசையை ரசிக்கும் ஒரு பணியாளர், இதனால் அவர்கள் ஒரு இசைக்கச்சேரிக்குச் செல்ல முடியும்
- தோட்ட வேலை செய்வதற்காக அழுக்காவதைப் பொருட்படுத்தாத ஒரு பணியாளர்
- சைகை மொழியைப் புரிந்துகொள்கிற ஒரு பணியாளர்
- ஒரு தகவல்தொடர்பு சாதனத்தைக் கொண்டு உதவுவதற்கு தொழில்நுட்பத்தை நன்கு அறிந்த ஒரு பணியாளர்

**இந்த நபர் எவ்வளவு காலம் தங்கி** உங்கள் குடும்பத்துடன் பணிபுரிய வேண்டும் என்பதைக் குறித்து யோசிக்கவும்:

- மாணவர்கள் கோடைகால விடுமுறைக்கோ அல்லது தங்களுக்கு ஒரு வேலை கிடைத்துவிட்டாலோ இதை விட்டு நீங்கிவிடலாம்
- பகுதிநேரமாகப் பணிபுரியும் சிலர் தங்களுக்கு முழுநேரப் பணி கிடைத்துவிட்டால், இதை விட்டு விலகிவிடலாம்

பணியாளர் என்ன **திறன்களைக்** கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைக் குறித்து யோசிக்கவும்:

- முதலுதவி/CPR
- Crisis Prevention Intervention (CPI) பயிற்சி
- ஓட்டுநர் உரிமம், வாகனம் மற்றும் கார் காப்பீடு
- மருந்துகளைக் கொடுக்க இயலுதல்
- கழிவறையைப் பயன்படுத்த உதவ இயலுதல் (உ-ம் டயப்பர்களை மாற்றுதல்)
- நீங்கள் எண்ணக்கூடிய ஏதேனும் பிற திறன்கள்

## ஒரு ஆதரவுப் பணியாளரை எங்கே தேடலாம்

- அவர்களின் இடைஓய்வுப் பணியாளர் பட்டியலைக் குறித்து அறிய www.respiteservices.com என்னும் இணையதளத்தைத் தொடர்புகொள்ளவும்
- Holland Bloorview'-இன் இடைஓய்வுத் திட்டத்தைக் குறித்து மேலும் தகவல்களை அறிந்துகொள்ள இந்த இணையதளத்துக்குச் செல்லவும் www.hollandbloorview.ca/respite
- 'சமூக இடைஓய்வு வாய்ப்புகள்' குறிப்புத் தாளுக்காக இந்த மின்னஞ்சல் முகவரியில் கேட்கவும் resourcecentre@hollandbloorview.ca

- தங்கள் ஆதரவுப் பணியாளர்களை எங்கு பெற்றார்கள் என்பதைக் குறித்து மற்ற குடும்பத்தினரிடம் பேசவும்
- உள்ளூர் உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றுக்கான ஒரு கைப்பிரதி அல்லது மின்னணு பதிவுகளை (அவர்களின் இணையதளத்தில் இடுவதற்கோ அல்லது நேரில் வழங்குவதற்கோ) உருவாக்கவும்

## ஒரு ஆதரவுப் பணியாளரை நேர்காணல் செய்து பணியமர்த்தல்

நீங்கள் வழாங்கும் வேலையைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு நபர்கள் உங்களை அழைப்பார்கள். நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளைப் பற்றி யோசிப்பாதற்கு சிறிது நேரம் செலவழிக்கவும்.

### தொலைபேசி நேர்காணல்

- ஒன்றுக்கு மேற்பட்ட பணியாளர்களுடன் பேசவும்
- உங்களைப் போல நீங்கள் தேடும் குணாதிசயங்கள் அந்த நபரிடம் இருந்தால்
- மனப்பாங்குகள், இசைவிணக்கம், நேர்மை மற்றும் உற்சாகம் ஆகியவற்றைக் கவனிக்கவும்
- நேருக்கு நேர் சந்திப்பதற்காக இரண்டு அல்லது மூன்று விண்ணப்பதாரர்களைத் தேர்வுசெய்யவும்
- இறுதியாக ஒருவரைத் தேர்வுசெய்யும்போது உங்கள் உணர்வுகளையும் நம்புங்கள்
- பராமரிப்புக்கு உள்ளாகும் நபரையும் நீங்கள் சந்திப்பில் கலந்துகொள்ளும்படி செய்யலாம்

### தனிப்பட்ட நேர்காணல்

- முதல் சந்திப்பு: சாத்தியமான இடைஓய்வுப் பணியாளர்களை ஒரு காஃபி ஷாப் போன்ற ஒரு பொது இடத்தில் நேரில் சந்திப்பதற்கு அழைப்பு விடுக்கலாம். உங்கள் குடும்ப உறுப்பினருடன் பணியாற்றுவதற்கு இந்த நபர் பொருத்தமானவராக இருப்பாரா என்பதைக் கண்டுபிடிக்க இது உங்களுக்கு நேரமளிக்கும்.
    - உங்கள் கேள்விகளுக்கு அவர்கள் எவ்வாறு பதிலளிக்கிறார்கள்?
    - அந்த நபர் உண்மையானவராகவும் இசைவிணக்கம் கொண்டவராகவும் உள்ளார் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

- அந்த நபர் மக்களுடன் நன்றாக உரையாடுகிறார?
- பராமரிப்புக்கு உள்ளாகும் நபரையும் நீங்கள் சந்திப்பில் கலந்துகொள்ளும்படி செய்யலாம்

- <u>இரண்டாவது சந்திப்பு</u>: பணியாளர்கள் ஓய்வெடுக்கும் இடத்தில் சாத்தியமான பணியாளர்களை நீங்கள் சந்தித்து, அவர்களைக் குறித்து நன்றாக அறிந்துகொள்ள நேரம் செலவழிக்கலாம் (உ-ம் வீடு, சமூக மையம், நிகழ்ச்சி, முதலியன)
    - சந்திப்புக்கான கேள்விகளின் ஒரு பட்டியலை உருவாக்கிக்கொள்ளவும்
    - அவர்களின் தற்குறிப்பு மற்றும் பரிந்துரைகளின் ஒரு நகலைக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளவும்
    - கேள்விகளைக் கேட்டு அந்த நபர் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார் என்பதைக் கவனிக்கவும்
    - பராமரிப்புக்கு உள்ளாக வேண்டிய நபரையும் சந்திப்பில் ஈடுபடுத்தவும், பின்னர் அவர்களின் சௌகர்யமான நிலை அல்லது எதிர்வினையைக் கவனித்து, அவர்களின் கருத்துக்கு செவிமடுக்கவும்.
    - உங்கள் உணர்வுகளையும் கூட நம்புங்கள்

## விண்ணப்பதாரர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள்

- இந்த வேலையைக் குறித்து நீங்கள் எவ்வாறு கேள்விப்பட்டீர்கள்?
- நீங்கள் ஏன் இந்த வேலையில் ஆர்வம் காட்டுகிறீர்கள்?
- குறைபாடுகளுடன் கூடிய குழந்தைகள் அல்லது நபர்களுடனான உங்களின் முந்தைய வேலை அனுபவத்தைப் பற்றி கூறுங்கள்.
- இந்த வேலையானது உங்கள் அனுபவங்கள் மற்றும் திறன்களுடன் பொருந்துகிறது என்று நீங்கள் எவ்வாறு எண்ணுகிறீர்கள்?
- நீங்கள் எப்போது கிடைக்கப் பெறுகின்றீர்கள்?
- உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியுமா? உங்களிடம் கார் உள்ளதா? உங்களிடம் காப்பீட்டுப் பாதுகாப்பு உள்ளதா? ஆம் எனில், உங்களிடம் எந்த வகையான காப்பீட்டுப் பாதுகாப்பு உள்ளது?
- ஒரு காவல்துறை பரிசோதனைக்கு உள்ளாக நீங்கள் விரும்புகிறீர்களா?
- _____ மாதங்கள் எங்களுடன் பணியாற்றுவதாக நீங்கள் உறுதியளிக்க முடியுமா?
- இதுதான் ஊதிய வரம்பு. ஒரு மணிநேரத்துக்கு ______ டாலர்கள் என்பது ஏற்கத்தக்கதா?

- நீங்கள் எனக்கு இரு தனிப்பட்ட அல்லது வேலை பரிந்துரைகளை வழங்க இயலுமா?
- நீங்கள் என்னிடமோ அல்லது என் குடும்ப உறுப்பினரிடமோ கேட்க வேண்டிய கேள்விகள் ஏதேனும் உள்ளதா?

## பணியாளருடன் பேச வேண்டியுள்ள விஷயங்கள்

- உங்கள் குடும்ப உறுப்பினரின் வாழ்க்கை மற்றும் செயல்பாடுகள்
- உங்கள் குடும்பம், பழக்க வழக்கங்கள் மற்றும் கால அட்டவணைகள் பற்றிய தகவல்கள்
- உங்கள் குடும்ப உறுப்பினர் மற்றும் பணியாளர் ஒன்றிணைந்து செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்ற சாத்தியமுள்ள செயல்பாடுகள்
- உங்கள் சமூகம் குறித்தத் தகவல்கள்
- "இது நிகழ்ந்தால் என்ன செய்வது?" போன்ற சூழ்நிலைகளைக் கையாள்வது எப்படி
- குறைபாடுடன் கூடிய ஒரு குழந்தை அல்லது பதின்மர் வயதினருக்கு ஆதரவளிப்பது எப்படி என்பதன் மீது பணியாளருக்குப் பயிற்சி
- அவர்களின் ஊதியம் மற்றும் ஊதிய அட்டவணை
- பணியாளரின் பங்களிப்பு, வேலை தொடங்குகிற மற்றும் நிறைவடையும் நேரங்கள் மற்றும் ஊதியம் ஆகியவற்றை விவரிக்கும் ஒப்பந்தம்
- உள்ளடக்கப்படும் செலவுகள்: உங்கள் குடும்ப உறுப்பினருடன் வேலை செய்யும்போது உணவு, உங்கள் குடும்ப உறுப்பினருடன் பயணிக்கும்போது பயணச் செலவுகள்

## பணியமர்த்துவதற்கு சரியான நபரைத் தேர்வுசெய்தல்

தேர்ந்தெடுப்பதற்காக பல நபர்களை நேர்காணல் செய்வது நல்லது. அனைத்து முக்கியத் தகவல்களையும் நீங்கள் பார்த்த பின்னர் உங்கள் தேர்வை மேற்கொள்ளவும்:

- அந்தப் பணியாளர் உங்கள் குடும்ப உறுப்பினருக்கு சரியான முறையில் பொருந்துகிறாரா?
- அந்த நபர் பார்ப்பதற்கு எப்படி உள்ளார்? அவர்கள் வேடிக்கையானவர்களாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் மனதிற்கினியவர்களாகவும் உள்ளனரா?
- அவர்கள் உங்கள் குடும்ப உறுப்பினருடன் வேலைசெய்வதற்குரிய திறன்களைக் கொண்டுள்ளனரா?
- அவர்கள் விரைவாகக் கற்கின்றார்களா?
- அவர்கள் வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்கிறார்களா?

- அவர்கள் பொறுப்பானவர்களாக, நம்பத் தகுந்தவர்களாக, இசைவிணக்கம் கொண்டவர்களாக, நம்பிக்கைக்குரியவர்களாக உள்ளார்களா?
- உங்களுக்குத் தேவைப்படும்போது அந்த அந்த நபரால் வேலை செய்ய முடியுமா?

பாதுகாப்பு விருப்பத் தேர்வுகளாக, மற்ற விண்ணப்பதாரர்களிடம் உங்களுக்குத் தேவைப்பட்டால் அவர்களை அழைக்க முடியுமா என்று கேட்கவும்.

## ஒரு ஆதரவுப் பணியாளருக்குப் பயிற்சியளித்தல்

பராமரிப்புக்கு உள்ளாகும் ஒரு குழந்தை அல்லது பதின்மர் வயதினர் பெருமூளை வாதம், வளர்ச்சிக் குறைபாடு, மூளைக் காயம் அல்லது ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் நோய் போன்ற ஒரு குறைபாட்டுடன் இருக்கலாம். ஒரு குறைபாட்டுடன் கூடிய ஒவ்வொரு நபர்களும் வெவ்வேறு முறையில் தொடர்புகொள்கிறார்கள், கற்கிறார்கள் மற்றும் புரிந்து கொள்கிறார்கள். அவர்கள் வேறு விருப்பங்களையும் கூட கொண்டிருக்கலாம். உங்கள் குடும்ப உறுப்பினரை மிகச்சிறந்த வழியில் ஆதரிப்பது எப்படி என்பதைக் குறித்து ஓர் ஆதரவுப் பணியாளருக்கு இன்னும் தெரியாமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் அவர்களுக்கு அதைக் கற்பிக்க முடியும்!

### தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல்

- உங்கள் குடும்ப உறுப்பினரைக் குறித்து மிகவும் முக்கியமானது என்ன என்பதைப் பணியாளர் புரிந்து கொள்வதற்கு உதவுவதற்கு ஒரு 'என்னைப் பற்றிய அனைத்தும்' புத்தகம், இன்ஃபோகிராஃபிக் அல்லது ஸ்லைடுஷோ போன்றவற்றை உருவாக்கவும்
  - ‘என்னைப் பற்றிய அனைத்தும்’ புத்தகங்கள், இன்ஃபோகிராஃபிக்ஸ் அல்லது ஸ்லைடுஷோக்கள் போன்றவற்றின் உதாரணங்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து இந்த மின்னஞ்சலைத் தொடர்பு கொள்ளவும் resourcecentre@hollandbloorview.ca
- குடும்பச் செயல்பாடுகள் மற்றும் வளங்களில் எவ்வாறு ஈடுபட்டிருப்பது என்பதில் பணியாளரை உள்ளடக்கி அவருக்குக் காண்பிக்கவும்
- ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதற்கான வழிகளைக் குறித்துக் கேட்டு ஒப்புக்கொள்ளவும் - நேரில் தொடர்பு கொள்வதா, தொலைபேசி, சமூக ஊடகம் அல்லது மின்னஞ்சல் மூலமாகத் தொடர்பு கொள்வதா என்பதைக் குறித்து.
- இவை உள்ளிட்ட உங்கள் குடும்ப உறுப்பினரைப் பற்றிய தகவல்களைப் பகிரவும்:
  - விருப்பு வெறுப்புகள் மற்றும் பழக்க வழக்கங்கள்

- சுகாதாரம், பாதுகாப்பு அல்லது மருத்துவத் தகவல்கள், சிகிச்சை செயல்திட்டங்கள்
- உபகரணம் அல்லது ஆதரவுகள்

- ஆதரவுப் பணியாளருக்கான பயிற்சியாளராக இருந்து கேள்விகளை ஊக்குவிக்கவும்
- சமூக இணைப்புகள் மற்றும் வளங்கள் தொடர்பான தகவல்களைப் பகிரவும்

## உங்கள் இடைஓய்வு பணியாளரை ஆதரித்தல்

- உங்கள் பணியாளருடன் தெளிவான முறையிலும் நீங்கள் இருவரும் ஒப்புக்கொண்ட வழியிலும் தொடர்புகொள்ளவும்
- நீங்கள் எவ்வளவு ஊதியம் செலுத்துகிறீர்கள் என்பதில் உங்கள் பணியாளர் சௌகர்யமாக உள்ளார் என்பதை உறுதிசெய்யவும்
- பணியாளரின் திறன்களை அங்கீகரிக்கவும்
- ஆதரவுப் பணியாளரிடம் அவர்களின் அன்றைய தின அனுபவத்தைக் குறித்துக் கேட்பதன் மூலம் அன்றைய பணிமுறையை நிறைவுசெய்யவும்
    - ஏதேனும் பிரச்சனைகளைக் கடந்து செல்லவும் தீர்வுகளைக் காண உதவவும் செய்யுங்கள்
    - பணியாளரிடம் சரிபார்த்து அவர்கள் ஏதேனும் கேட்க விரும்புகின்றனரா என்பதைக் கேட்கவும்
    - வெற்றிகளைக் குறித்துக் கேட்கவும்: அவர்கள் உங்கள் குடும்ப உறுப்பினருக்கு புதிதாக எதையேனும் கற்பித்துள்ளனரா?
    - நீங்கள் கவனித்துள்ள ஏதேனும் நேர்மறையான செயலைக் குறித்து சில பின்னூட்டத்தை வழங்கவும்
- ஒவ்வொரு சில மாதங்களுக்கும் ஆதரவுப் பணியாளரின் அனுபவத்தை மீளாய்வு செய்வதற்கான வாய்ப்பை வழங்கவும்
    - அவர்கள் ஏதேனும் கற்றுக்கொள்ள விரும்புகிறார்களா என்பதைக் கேட்கவும்
    - அவர்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்படுகிறதா என்பதையும் உங்களால் அவர்களுக்கு எவ்வாறு உதவமுடியும் என்பதையும் கேட்கவும்
    - புதிய செயல்பாடுகளுக்கான யோசனைகள் அவர்களிடத்து உள்ளதா என்பதைக் கேட்கவும்

*கடைசியாக நவம்பர் 2019-இல் ஒரு குடும்ப ஆதரவு சிறப்பு நிபுணர் மற்றும் ஒரு குடும்ப வழிகாட்டி ஆகியோரால் புதுப்பிக்கப்பட்டது*